தமிழ் முரசு (01.08.2019)

## டிஎன்பிஎல் நிறுவனம் சார்பில்

# கரூரில் இலவச மருத்துவ முகாம்



கரூர் டிஎன்பிஎல் நிறுவனம், கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனை ஆகியவை சார்பில் இலவச பொது மருத்துவ முகாம் டிஎன்பிஎல் சமுதாய கூடத்தில் நடந்தது. முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன், காகித நிறுவன செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

க.பரமத்தி, ஆக.1- கரூர் டிஎன்பிஎல் நிறுவனம், கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனை ஆகியவை சார்பில் இலவச பொது மருத்துவ முகாம் டிஎன்பிஎல் சமுதாய கூடத்தில் நடந்தது. முதன்மை பொது மேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன் வரவேற்றார். காகித நிறுவன செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் தலைமை வகித்தார்.

முதன்மை பொது மேலாளர்கள் (வணிகம் மற்றும் கருவியியல்) பாலசுப்பிரமணியன், (உற்பத்தி) தங்கராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கரூர் மாவட்ட வருவாய் அலுவலர் சூர்யபிரகாஷ் பங்கேற்ற குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

முகாமில் 17 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் மருத்துவ குழுவினர்கள் கலந்து கொண்டு சர்க்கரை நோய், ரத்தக்கொதிப்பு, இருதயம், எலும்பு, பல், கண், மகப்பேறு, மார்பகம், கர்ப்பப்பை, குழந்தைகள் நலம், நரம்பு, காது, மூக்கு, தொண்டை போன்ற அனைத்துவித நோய் அறிகுறிகளுக்கும் பொது மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. இதில் 760 பேருக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு மருத்துவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட சிறப்பு மருந்து மாத்திரைகள் இலவசமாக வழங்கப்பட்டது. முகாம் ஏற்பாடுகளை மனிதவளத்துறையினர் செய்திருந்தனர்.